செ.வெ.எண்:184 நாள்:17.03.2018

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கூட்டுறவு தேர்தல் நடைமுறைகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் திரு.எம்.ராஜேந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

-----

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் கூட்டுறவு தேர்தல் நடைமுறைகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் திரு.எம்.ராஜேந்திரன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (17.03.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில கூட்டுறவு தேர்தல் ஆணையர் அவர்கள் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் கையேட்டினை வெளியிட்டு பேசியதாவது:-

தமிழகத்தில் கூட்டுறவு சங்க தேர்தலை நல்ல முறையில் நடத்திட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மற்ற தேர்தல்களை போலவே கூட்டுறவு சங்க தேர்தலையும் சிறப்பாக நடத்திட வேண்டும். கூட்டுறவு சங்க தேர்தல் விதிமுறைகளை முழுமையாக பின்பற்ற வேண்டும். விதிமுறைகளில் ஏதேனும் சந்தேகம் ஏற்பட்டால் உயர் அலுவலர்களை தொடர்பு கொண்டு தெளிவுபடுத்தி கொள்ள வேண்டும். தேர்தல் நடத்துவதில் ஏதேனும் விதிமீறல்கள் ஏற்பட்டால் தேர்தல் நடத்தும் அலுவர்களே பொறுப்பேற்க வேண்டும். எனவே விதிமுறைகளை முழுமையாக சரியான முறையில் பின்பற்ற வேண்டும். எவ்வித முரண்பாடுகளும்யின்றி தேர்தலை நடத்த வேண்டும். இட ஓதுக்கீட்டினை சரியான முறையில் பின்பற்ற வேண்டும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பாக கூட்டுறவு சங்க தேர்தலை நடத்திட வேண்டும். என பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப, கூடுதல் பதிவாளர் திரு.ஜான்பீட்டர் அந்தோணிசாமி, திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் திரு.குருமூர்த்தி, மற்றும் துணை பதிவாளர்கள், கூட்டுறவு சங்க செயலாளர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.